**இந்திய வானிலைத் துறை &தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை – 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 14. 07..2021**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 28°செ ஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 75 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் மேற்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மலையடிவாரங்களில் மிதமான மழையும், உள் மாவட்டங்களில் லேசான மழையும் பொழிய வாய்ப்புள்ளதால் நீர் பாசனத்தினை தள்ளி வைக்கவும். போதிய வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும்.
- மழையுடன் காற்றின் வேகமும் மணிக்கு 15 கி.மீ மேல் காணப்படுவதால் கரும்பு, வாழை மற்றும் உயரமான மரக்கன்றுகளுக்கு போதிய முட்டு கொடுக்க வேண்டும்.
- வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால், நடவு செய்த வயல்களில் ஐந்து செமீ நீர் தேக்கி மழையினால் நாற்றுகள் இடமாறுவதை தவிர்க்கலாம்.
- வரும் நாட்களில் 15 செ.மீ மழை கிடைக்கப்பெற்றால், மானாவாரி சோளத்திற்கு ஒரு ஹெக்டருக்கு 25 கிலோ யூரியா இட வேண்டும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி இறவை மற்றும் மானாவாரியில் பயிரிடப்பட்ட பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் ஒரு சதுர மீட்டரில் 33 செடிகள் இருக்குமாறு பாடுவாசி விதைப்பு செய்ய வேண்டும்.

- மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரித்து விட்டம் கட்ட வேண்டும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி பின் பருவ கரும்பிற்கு மேலுரமாக எக்டருக்கு வேப்பம்புண்ணாக்கு கலந்த தழைச்சத்து 90 கிலோ மற்றும் சாம்பல் சத்து 37 கிலோ உரங்களை இட வேண்டும்.
- நிலவும் மேகமூட்டமான வானிலையால் கறிவேப்பிலையில் இலைப்புள்ளி நோய் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஒரு கிராம் கார்பன்டசிம்மை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
- ஜீலை 20 முதல் 30 ம் தேதி வரை கொடி வகை காய்களை விதைப்பதற்கு ஏற்ற தருணம். எனவே பெறப்படும் மழையைப் பயன்படுத்தி விதைப்புக்கான குழிகளை தயாரிக்க வேண்டும்.
- வரும் நாட்களில் அதிக காற்றின் ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுவதால் திராட்சையில் அடிசாம்பல் அல்லது மேல்சாம்பல் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து தேவைப்பட்டால் மேல்சாம்பல் நோய்க்கு 0.3சத நனையும் கந்தகமும் அடிசாம்பல் நோய்க்கு ஒரு சத போர்டோ கலவையை தெளிக்க வேண்டும்.
- மழையுடன் காற்றின் வேகம் 15 கிமீக்கு மேல்அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும்.
- அதிக காற்றின் வேகம், காற்றின் ஈரப்பதம் மற்றும் மேகமூட்டம் நிலவுவதால் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்கத்தை கண்காணித்து தேவைப்பட்டால் மேன்கோசெப் (அ) காப்பர் ஆக்ஸி குளோரைடு பூஞ்சாணக் கொல்லியை 0.25 சத கரைத்து தெளிக்க வேண்டும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி 30 நாள் வயதுடைடய மஞ்சளுக்கு ஒரு ஹெக்டருக்கு 55 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ மூரிடயேட் ஆப் பொட்டாஷ் உரத்தினை இட வேண்டும்..
- நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடிவீக்க நோயினை கட்டுப்படுத்த பொட்டாசியம் பர்மாங்கனேட் கொண்டு பால் மடியை கறப்பதற்கு முன்னும் பின்னும் சுத்தம் செய்ய வேண்டும்.

## 2.காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் நாட்களில் இலோசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 33°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையால் குறுவை நெற்பயிரில் தூர் கட்டும் பருவத்தில் 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 35 கிலோ யூரியாவையும் சாம்பல் சத்து உரமான 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும்.
- தற்போது உள்ள தட்பவெப்ப நிலையின் காரணமாக பருத்தியில் வளர்ச்சி குன்றி சிவப்பு நிற இலைகள் தோன்றுவதற்க்கு காரணமான மெக்னிசீயம் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இலை வழி தெளிப்பாக 2% மெக்னிசீயம் சல்பேட், 1% யூரியா மற்றும் 0.1% ஜிங்சல்பேட் உரத்தினை தெளிக்க வேண்டும்..
- தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்பதற்க்கு ஆறு மாதத்திற்க்கு ஒரு முறை ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மில்லி வேர் மூலம் செலுத்த வேண்டும்.
- பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட வேண்டும்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும்.. வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது,. அதிகபட்ச வெப்பநிலை 33-35°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23-25°செ ஆகவும், காலை நேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 15 கி.மீ வரை வீசும் என்றும் காற்றின் திசை தெற்கு மற்றும் தென் மேற்கு திசையில் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- எதிர்பார்க்கப்படும் மழையைப் பொறுத்து பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தை தள்ளி போடவும்.
- மண்ணின் தரத்தை மேம்படுத்த மண் ஈரத்தினைப் பொறுத்து அறுவடை செய்யப்பட்ட பயிர் கழிவுகளை துண்டுகளாக வெட்டி மண்ணில் கலக்கவும்.
- நிலவும் வானிலையால் நெல்லில் வளர்ச்சிப்பருவத்தில் தண்டுத் துளைப்பான் நோய் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு அசாடிராக்டின் 0.03% @ 1000 மில்லி அல்லது கார்போபியுரான் 3% CG 25 கிலோ, அல்லது குளோரோடேரேனிலிபுருள் 18.5% SC @ 150 மில்லி தெளிக்க வேண்டும்.
- நிலவும் வானிலையால் நெல்லில் வளர்ச்சிப்பருவத்தில் இலைசுருட்டுப்புழு தென்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு அசாடிராக்டின் 0.03% 1000 மில்லி அல்லது குளோரோடேரேனிலிபுருள் 18.5% SC @ 150கி அல்லது தையோமீத்தாக்சிம் 25% WG @150கி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

- தற்போது நிலவும் வானிலையால் வெங்காயத்தில் பச்சை புழுவின் தாக்கம் தென்பட்டால் அதைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 20EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் பருத்தியில் வளர்ச்சி பருவத்தில் அசுவினி பூச்சயின் தாக்கம் பரவலாக தென்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு டைமீத்தையேட் 30 EC 500 மில்லி அல்லது அசார்டியாக்டின் 0.03% 500 மில்லி தெளிக்க வேண்டும்..
- தற்போது நிலவும் வானிலையால் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழைக்கு முட்டு கொடுக்கவும்.
- தற்போது நிலவும் வானியையால் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வரவாய்ப்புள்ளதால் கால்நடை மருத்துவரை அணுகி முறையான தடுப்பூசி போட்டுக்கொள்ளவும். மேலும் முறையான பிளீச்சிங் பவுடர் கொண்டு கொட்டைகையை சுத்தமாக வைக்க வேண்டும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 31°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது 21°செ முதல் 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 10 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையால் எலுமிச்சையில் பழசாற்றை உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 50 மில்லி என்ற அளவில் அபாமெக்டின் மருந்துடன் கரும்பு ஆலைக் கழிவையும் கலந்து தோட்டத்தில் பல இடங்களில் வைத்து அந்து பூச்சிகளை கவர்ந்து விரட்டலாம். மேலும் விளக்குப் பொறிகளை வைத்து அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.
- தற்போது நிலவும் வானிலையால் தக்காளியில் செப்டோரியா இலைப்புள்ளி நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ தக்காளி விதைக்கு இரண்டு கிலோ ‘‘திராம்’’ அல்லது டைத்தேன் எம்-45 கொண்டு விதை நேர்த்தி செய்வதன் மூலம் கட்டுப்படுத்தலாம். மேலும் 350 கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிப்பதின் மூலமாகவும் கட்டுப்படுத்தலாம்.
- தற்போது நிலவும் வானிலையால் மல்லிகையில் கழுத்தழுகல் மற்றும் வேர் அழுகல் நோய் பரவலாக தென்படுகிறது. இதன் தாக்குதுலைக் கட்டுப்படுத்த நன்கு மக்கிய தொழு உரத்துடன் டிரைக்கோடெர்மாவிரிடி கலந்து தெளிக்க வேண்டும்.

- தற்போது நிலவும் வானிலையால் கொய்யா செடியில் பழ ஈக்களின் தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு 25 என்ற எண்ணிகையில் மெத்தில் யூஜீனால் இனகவர்ச்சிப் பொறிகளை தாக்கப்பட்ட வயல்களில் வைத்து பழ ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். மேலும் 10 கிராம் மொலாஸஸ் அல்லது வெல்லத்தடன் 10 லிட்டர் தண்ணீருக்கு 35 மில்லி என்ற அளவில் பிப்ரோனில் மருந்தினை கலந்து பழங்கள் பழுப்பதற்கு முன்னால் பதினைந்து நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.
- தற்போது ஆங்காங்கே மழை பெய்துள்ளது. பருவ மழையும் தொடாந்து எதிர்பார்க்கப்படுவதால் வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவனங்களை வெயிலில் நன்கு உரல வைத்து பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்த விவசாயிகள் தங்களது கால்நடைகளை பாதுகாக்லாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு மிதமாது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 16°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09°செ முதல் 10°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- வரும் நாட்களுக்கு கன மழை வரும் என எதிர்பார்க்கபடுவதால் இரசாயனங்கள் தெளித்தல் மற்றும் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுதலை தவிர்க்க வேண்டும். மேலும் வயலில் வடிக்கால் வசதி ஏற்படுத்தவும்.
- காய்கறிப் பயிர்களில் வெட்டுப்புழு தாக்குதல் தென்பட்டால் இத்தாக்குதலை கட்டுப்படுத்த, ஒளி பொறியை மாலை 7 மணி முதல் 10 மணி வரை உபயோகித்து தாய் அந்துப் பூச்சியை அழிக்கலாம்..
- முட்டை கோஸ் பயிரில் கடுகு பயிரை ஊடுபயிராக 20:1 என்கிற விகிதத்தில் பயிர் செய்யும் பொழுது வைர அந்து பூச்சி முட்டையிடுவதை கவர்ந்து இழுத்து குறைக்கலாம்.
- ஜூலை மாதத்தில் உருளைகிழங்கில் நோய் பாதிப்பை தவிர்க்க குப்ரி கிரிதாரி நோய் எதிர்ப்பு மிக்க இரகத்தை நடவு செய்ய வேண்டும்.
- காய்கறிப் பயிர்களில் வளர்ச்சிப் பருவத்தில் தென்படும் இலைப்பேன் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுபடுத்த, அசாடிராக்டின் 2 மில்லி /லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழியாக தெளிக்க வேண்டும்.

.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூ ட்டத்துடன் தென்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் விதைப்பிற்கு முன் 200 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் தலா ஒரு கிலோ டிரைக்கொடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் கலந்து ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் இட வேண்டும்.
- அடுத்த வரும் நாட்களில் பெய்யும் மழையை பயன்படுத்தி நிலக்கடலை வயலில் முளைத்துள்ள களைகளை கட்டுப்படுத்த (விதைத்த 20 / 25 நாட்களில்) ஒரு ஏக்கருக்கு 400 மில்லி இமாஸ்தபயைர் 10 % SL என்ற களைக்கொல்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மண்ணில் ஈரம் இருக்கும்போது தெளிக்க வேண்டும்.
- தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதல் தென்படுகிறது, இதனைக் கட்டுப்படுத்த வெர்டிசிலியம் லிகானி என்ற உயிரியல் மருந்தினை ஒரு லிட்டருக்கு எட்டு கிராம் என்ற அளவில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

**கால்நடைகள் பொது அறிவுரை**

- நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் மானியத்துடன் கூடிய கால்நடை காப்பீடு திட்டம் / 2020/2021 செயல்படுத்தப்பட உள்ளது, இதில் நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை காப்பீடு செய்ய 4900 குறியீடு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இத்திட்டத்தில் அதிகபட்சமாக ரூ 35.000 வரை மானியத்துடன் காப்பீடு செய்து கொள்ளலாம். வறுமை கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு 50 சதவிகித மானியத்திலும். வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள். தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு 70 சதவிகித மானியத்திலும் காப்பீடு செய்யப்படும்,. இத்திட்டத்தின் மூலம் அதிகபட்சமாக ஒரு குடும்பத்திற்கு 5 பசு மற்றும் எருமை மாடுகளுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தில் 2.5 வயது முதல் 8 வயதுடைய பசு மற்றும் எருமைகளுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். கால்நடைகளுக்கு காப்பீடு செய்ய விரும்பும் கால்நடை வளர்ப்போர் அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தினை அணுகி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- தற்போது நிலவும் வானிலையால் காற்றின் வேகம் தொடர்ந்து அதிகமாக காணப்படுவதால் தீவனம் வீணடிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இன்னும் இரு மாதங்களுக்கு அதிக காற்றின் வேகம் கொண்ட வானிலை நிலவும், ஆதலால் தீவன விரயத்தை தடுக்க தீவனத்தில் சிறிது அளவு தாவர எண்ணையை சேர்க்கலாம். இதனால் மதிப்புள்ள வைட்டமின் போன்றவை காற்றில் பறந்து செல்வதை தடுக்க முடியும். மேலும். பக்கவாட்டில் படுதாவை கட்டி தொங்க விட வேண்டும்.

### 6. வடகிழக்கு மண்டலம்

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி குறுவை நெல் நாற்றாங்கால் தயாரிக்கலாம், நெல் விதைத்து இரண்டு நாள் ஆகியிருந்தால், மழை வரும் சயமங்களில் நாற்றாங்காலில் சிறிதளவு தண்ணீர் தேக்குவதன் மூலம் விதை நெல் இடம் மாறுவது தடுக்கப்பட்டு முளைப்புத்திறனை அதிகப்படுத்தலாம்.
- தற்பொழுது நிலவி வரும் வானிலையால் நெல் நாற்றாங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் அதைக் கட்டுப்படுத்த தையோமீத்தாக்சைம் 25% WG 100 கிராம் /லிட்டர் அல்லது டையோமீத்தையேட் 1.5 மில்லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- நெல் அறுவடைக்கு பின் எஞ்சியிருக்கும் வைக்கோல் மற்றும் இதர பயிர் கழிவுகளை கால்நடை தீவனமாகும் பொருட்டு அதை பதப்படுத்தி வைக்க வேண்டும்.
- நெல் வயலில் பாசி அதிகளவு படர்வதால் பயிர்களின் வளர்ச்சி குறைய வாய்ப்புள்ளது.. இதைக் கட்டுப்படுத்த 2 கிலோ காப்பர் சல்பேட்டை மணலுடன் கலந்து இடவும்.
- தக்காளி நாற்றாங்கால் அமைக்க இதுவே நல்ல தருணமாகும். எனவே டிரைக்கோடெர்மா 4 கிராம் / கிலோ அல்லது சூடோமோனோஸ் 10 கிராம் / கிலோ என்ற அளவில் விதைகளுடன் விதை நேர்த்தீ செய்து விதைக்கவும்.
- தற்போது நிலவிவரும் சூழ்நிலையில் கத்தரி செடியில் குருத்து துளைப்பான் மற்றும் காய் துளைப்பான் தாக்கம் ஏற்பட வபய்ப்புள்ளது. அதைக் கட்டுப்படுத்த குளோரான்ட்ரைனிலிபுரோல் 0.5 அல்லது இமாமெக்டின் பென்சோயேட்@ 0.4 /லிட்டர் கலந்து தெளிக்கவும்.

- தற்போது நிலவிவரும் சூழ்நிலையில் எள் பயிரில் குருத்து இலைப்பிணைக்கும் புழுவின் தாக்கம் தென்பட்டால் அதைக் கட்டுப்படுத்த கார்பரில் 50 WP 1000 கிராம் / எக்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவிவரும் சூழ்நிலையில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்டவும்.
- தற்போது நிலவிவரும் சூழ்நிலையில் தென்னந்தோப்பில் கிடைக்கும் மழையினை சேமிக்கும் வகையில் வட்ட பாத்தி அமைக்க வேண்டும். ஐந்து வயதிற்கு மேலுள்ள ஒரு மரத்திற்கு 650 கிராம் யூரியா, ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட் , மற்றும் ஒரு கிலோ பொட்டாஷ் கலந்து இட வேண்டும். மேலும் ஒரு மரத்திற்கு நுண்ணூட்ட சத்து கலவை 250 கிராம் என்ற அளவில் மண்ணின் மேற்பரப்பில் இட வேண்டும்.
- வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் இளம் கன்றுகள் மற்றும் ஆட்டுக் குட்டிகளை மழை சாரலிலிருந்து நனையாமல் பாதுகாக்க வேண்டும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் ஆட்டுக்கொட்டைகையை சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் இரத்தக் கழிசல் ஏற்படுத்த கூடிய காக்டிசியா எனும் நுண்ணுயிரி பெருக வாய்ப்புள்ளது.
- வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- முயல் கொட்டகைகளில் மழைச்சாரல் உட்புகாமல் இருக்க பக்கவாட்டு சுவர்களில் கோணி பைகளை கட்டி தொங்க விட வேண்டும்.
- புறக்கடை கோழி வளர்ப்பில் கோழிகள் தேங்கி இருக்கும் நீரை குடிக்காமல் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் இது ஒட்டுண்ணி தாக்கத்தை ஏற்படுத்தும்.
- கோழி பண்ணையில் எல்லா நேரமும் சுத்தமான குளிர்ந்த நீர் கோழிகளுக்கு கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

### 7.அதிக மழை பெறும் மண்டலம்

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்ப நிலை $31^0$செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை $25^0$செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் மாலை நேரக் காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையால் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி நெல் மற்றும் தோட்டப்பயிர்களான காய்கறிகள், தென்னை மற்றும் ரப்பர் மரங்களை நடவு செய்வதற்கு நிலங்களை தயார் செய்யவும்.
- தற்போது நிலவும் வானிலையால் மிளகு முதிர்ச்சி பருவத்தில் பூப்பதற்கு முன்பும் (மே) புதிய இலைகள் மற்றும் மொட்டு விடும் போதும் (ஜூன்) மிளகு கொத்து ஆரம்ப நிலை (ஜூலை) மற்றும் குண்டூசி தலை பருவத்திலும் (ஆகஸ்ட்) மிளகு கொத்து உதிர்வதை தவிர்க்க இலைவழி ஊட்டமாக 1.0% டை அம்மோனியம் பாஸ்பேட்டினை தெளிக்க வேண்டும்.
- மழை எதிர்பார்க்கபடுவதால் பழ வகை மரங்களுக்கு வட்டப் பாத்திகள் அமைத்து மழை நீரை சேமிக்க வேண்டும்.
- காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ. இருப்பதனால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் காய்க்கும் தென்னை மரங்களுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தென்னை டானிக் மரம் ஒன்றிற்கு 200 மில்லி வீதம் வேர்வழியாக செலுத்த வேண்டும்.

**பேராசிரியர்**

**மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலை**

**ஆராய்ச்சி மையம்**